## கௌரவமான தொழில் என்றால் என்ன?

கௌரவமான தொழில் என்பது ஒரு தனிமனிதனோ அல்லது குடும்பமொன்றோ தனது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் போதியளவான வருமானத்தை தரும் தொழிலாக இருத்தல் வேண்டும். அதேவேளை தொழில் செய்யுமிடத்தில் பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பு என்பனவற்றை உறுதிபடுத்துவதாகவும், சமவாய்ப்பை அளிப்பதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் தனிநபர் அபிவிருத்தி, சமூக ஒருங்கிணைப்பினை உருவாக்குவதற்கான சுதந்திரம் மற்றும் தீர்மானம் எடுக்கும் இடத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பு என்பவற்றை வழங்குவதாக இருத்தல் வேண்டும்.

நாட்டில் உள்ள தொழிற்சட்டங்களை அமுல்படுத்துவதுடன், தேவையேற்படும் பட்சத்தில் புதிய தொழிற்சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமே கௌரவமான தொழிற்சூழலை உருவாக்கிக்கொள்ள முடியும். இலங்கையில் பணியாற்றும் அரச, தனியார் மற்றும் ஸ்தாபனமயப்படாத அனைத்து தொழிலாளர்களும் கௌரவமான தொழிற்சூழலை கொண்டிருக்க உரித்துடைமையுண்டு.

## கௌரவமான தொழிற் சூழல் யார், யாருக்கு?

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், கட்டுமாணம், கடை, வர்த்தக நிறுவனங்கள், அலுவலகம், ஆடைத் தொழிற்சாலை, சிகை அலங்காரம், ஊடக நிலையங்கள், உணவகங்கள் மற்றும் உணவு உற்பத்தி நிலையங்களில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு இது உரித்தாகும். கௌரவமான தொழில் பின்வரும் தொழில் உரிமைகளை உறுதிப்படுத்துகிறது. ஒவ்வொரு தொழிலாளரும் பின்வரும் உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

## தொழில் ஒப்பந்தம்

தொழிலாளி ஒருவரை வேலைக்கு அமர்த்தும் வேளையில் அவரது வேலை தொடர்பாக எழுத்து மூல ஒப்பந்தக் கடிதத்தை தொழில் தருநர் வழங்க வேண்டும். எழுத்து மூல கடிதம் வழங்கப்படாவிடினும் வாய்மொழி ரீதியாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பினும் அது சட்ட ரீதியான ஒப்பந்தம் எனக் கருதப்படும்.

## வேலை நேரம்

ஊழியர் ஒருவர் உணவு உண்ணும் நேரத்தை தவிர நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும். ஒரு வாரத்தில் மொத்தம்

48 மணித்தியாலங்கள் மட்டுமே வேலை செய்ய வேண்டும். அதாவது வாரத்தில் 5, 1/2 நாட்கள் வேலை செய்ய உரித்துண்டு.

## விடுமுறை நாட்கள்

வருடத்தில் 14 நாட்களுக்கு விடுமுறையும் அதற்குரிய சம்பளமும் வழங்கப்பட வேண்டும். மேலும் அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள வர்த்தக மற்றும் பகிரங்க விடுமுறை நாட்களான தைப்பொங்கல், சுதந்திர தினம், வெசாக், தமிழ் சிங்கள புதுவருடத்திற்கு முந்தைய தினம், மேதினம், நபிகள் பிறந்த தினம், கிறிஸ்து பிறந்த தினம் மற்றும் போயா போன்ற நாட்களில் விடுமுறை

வழங்கப்பட வேண்டும். இத்தினங்களில் தொழில் தருநர் வேலை வழங்கினால் தொழிலாளருக்கு 1,1/2 நாள் சம்பளம் கொடுக்க வேண்டும்.

## சேவைக்கால கொடுப்பனவு

இக்கொடுப்பனவானது 15 வேலையாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாக தொழில் புரியும் வர்த்தக நிலையங்கள் மற்றும் பணிமனைகளில் தொழில் செய்யும் ஊழியர் சார்பாக தொழில் தருநர் வழங்கும் கொடுப்பனவாகும். இப்பணிக்கொடையை 5 வருடத்திற்கு அதிகமாக பணிபுரிந்த ஒருவரே பெற உரித்துடையர். இதனை ஓய்வு பெறும் வேளையில் அல்லது 5 வருடத்திற்குப்பின் சேவையிலிருந்து நீங்கும் போது பெற உரித்துடையர்.

சேவையிலிருந்து விலகும் போது சேவைபுரிந்த வருடத்தை கணக்கிட்டு ஒரு வருடத்திற்கு அரைமாத (1/2) சம்பளம் என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

## ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்

ஒவ்வொரு தொழிலாளரும் ஊழியர் சேமலாப நிதியைப் பெற தகுதி உடையவராவர். தொழிலாளர் சார்பாக தொழில் தருநர் தொழிலாளிக்கு வழங்கும் மாதச் சம்பளத்திற்கமைய 12 வீதம் செலுத்த வேண்டும். அதேவேளை தொழிலாளியின் மொத்த மாதச் சம்பளத்தின் 8 வீதத்தை கழித்து ஊழியர் சேமலாப நிதியத்திற்குச்

செலுத்த வேண்டும். இது வேலையில் சேர்ந்த மாதம் முதல் செலுத்துப்பட வேண்டும். ஒரு நாள் வேலை செய்திருப்பினும் அத்தொழிலாளிக்கும் இந்நிதி செலுத்தப்பட வேண்டும்.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

தொழிலாளி ஒருவர் சார்பாக தொழில் தருநர் தொழிலாளிக்கு வழங்கப்படும் சம்பளத்தின் 3 வீதத்தை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டும். இத்தொகையை தொழில் தருநரே செலுத்த வேண்டும். இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நிரந்தர, தற்காலிக, அமய, ஒப்பந்த, துண்டு அடிப்படை, பயிலுநர், பயிற்சி பெறுவோர் ஆகிய எல்லா ஊழியர்களுக்கும் ஏற்புடையதாகும்.

## நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம்

இச்சட்டத்தின்படி தொழிலாளர் ஒருவர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது காயமடைந்தால் அல்லது அவரது தொழிலின் விளைவாகவும் தொழில் செய்யும் பொழுதும் ஏற்படும் விபத்தொன்றினால் காயமடைந்தால் மற்றும் தொழில்சார் நோய்களால் அல்லது தொழிலின் தன்மை காரணமாக ஏற்படும் நோய்களால் துயருறும் தொழிலாளருக்கு அல்லது தொழில்சார் நோய்களால் இறக்கும் தொழிலாளரில் தங்கி வாழ்பவருக்கு நட்டஈட்டை வழங்க வேண்டும்.

***தொழில்தருநர் நட்டஈடு செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள்: வேலையாள் எவரும்***

1. தொழில் ஸ்தாபனத்தில் அதாவது தொழிலில் ஈடபட்டுக்கொண்டிருக்கும் போது

2. தொழிலின் காரணமாக ஏற்படும் போது மரணத்தின்போது

3. திடீர் விபத்து நிமித்தம் ஏற்படும் இழப்பு அல்லது மரணத்தின்போது

## *நட்டஈட்டுக்கு விண்ணப்பிக்கும் முறை*

- மரணத்தை விளைவிக்கும் விபத்தைவிட ஏனைய விபத்துக்கள் ஏற்பட்டவுடன் தொழில்தருநருக்கு அறிவிக்கப்பட்டிருப்பின் காயமடைந்த வேலையாள் நேரடியாக நட்டஈட்டு விண்ணப்பத்தை ஆணையாளருக்கு சமர்ப்பிக்க முடியும். இத்தகைய விண்ணப்பம், தகைமையுள்ள வைத்தியத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள ஒருவரின் மருத்துவ அறிக்கையுடன் "ஏ" (A) படிவத்தின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.
- ஏதாயினும் ஒரு விண்ணப்பமானது, விபத்து அல்லது மரணம் ஏற்பட்ட தினத்திலிருந்து 2 வருடங்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

- மரணத்தை விளைவிக்கும் விபத்து சம்பந்தமாக இறந்த தொழிலாளியின் பிரதான தங்கிவாழுனர் நட்டஈட்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம். இவ் விண்ணப்பம் “பீ” (B) படிவத்தில் செய்தல் வேண்டும். இத்துடன் மரணச் சான்றிதழும் முடியுமானவிடத்து மரண விசாரணைக் குறிப்பும் அனுப்பப்படல் வேண்டும்.

## கர்ப்பிணி தொழிலாளர்களது உரிமை

இக்கொடுப்பனவினை நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற பெண் ஊழியர் ஒருவர் பெற உரித்துடையர். நிதியச் சட்ட முறையான விடுமுறைகள், வார இறுதி விடுமுறைகள் விலகலாக முதலாம், இரண்டாம் பிரசவங்களுக்கு முறையே 84 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் (12 வாரங்கள்) மூன்றாம் பிரசவத்திற்கு 42 நாட்கள் (6 வாரங்கள்) சம்பளத்துடனான விடுமுறையும் வழங்கப்படும்.

பெண் ஊழியர் ஒருவர் கருவுற்றால் அவர் தொழில் தருநருக்கு அறிவிக்க வேண்டும். காரணம் தொழில் தருநர் அப்பெண்ணுக்கு பிரசவத்திற்கு 3

மாதங்களுக்கு முன்னும் பின்னும் கடினமான அல்லது ஆபத்தை விளைவிக்கக்கூடிய வேலைகளை வழங்கக் கூடாது.

மகப்பேறு என்பது ஒரு உயிருள்ள கருவினை பிரசவித்தலாகும். உயிருள்ள கரு என்பது? 12 அங்குல நீளமும், குறைந்தது 2 இறாத்தல் நிறை உடையதாக இருத்தல் வேண்டும். கருச்சிதைவுக்கு மகப்பேற்று நன்மை வழங்கப்படாது. மகப்பேற்று நன்மையைப் பெறுவதற்கு ஒரு பெண் தொழிலாளி சட்டப்படி திருமணம் முடித்தவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில்லை.

## பாலூட்டும் தாய்மார் குழந்தைக்கு பாலூட்டுவதற்கு நேர ஒதுக்கீடு

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தையொன்றுக்குப் பாலூட்டும் (தாய்மார்) பெண் ஊழியர் எவருக்கும் 9 மணித்தியாலங்களைக் கொண்ட காலப்பகுதியில், ஒவ்வொரு நாளும் இரண்டு இடைவேளைகளுக்குள் குழந்தைக்கு பாலூட்ட ஒவ்வொரு மணித்தியாலம் வழங்க வேண்டும். இந்த இடைவேளைகள் காலையிலும் மாலையிலும் வழங்க வேண்டும். தொழில் தருநர் பிள்ளைப் பராமரிப்பு இல்லமொன்றை அல்லது பாலூ ட்டுவதற்கான வேறு வசதியை ஏற்பாடு செய்திருந்தால் அத்தகைய இடைவேளை 30 நிமிடங்களுக்கு குறையாதிருத்தல்

வேண்டும். அத்தகைய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிராத விடத்து இவ் இடைவேளை ஒரு மணித்தியாலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

தொழிலாளர்களுக்கு வேலைத்தளத்தில் பின்வரும் வசதிகளை வழங்குதல் வேண்டும்

- களைப்பாறும் அறைகள்
- உணவருந்துவதற்கு உகந்த இடம்
- ஆண், பெண் இருபாலருக்கும் தனியான கழிப்பறைகள்
- உடலுக்கு பாதிப்பு ஏற்படும் தொழில்களாயின் பாதுகாப்பு கவசங்கள்
- மற்றும் உண்பதற்கு குறித்த நேரம் ஒதுக்கப்படல் வேண்டும்

இவற்றுடன் பின்வரும் வசதிகளைக் கொண்டமைதல் வேண்டும்.

- நல்ல காற்றோட்டம்
- வெளிச்சம்
- சுத்தமான பருகுந் தண்ணீர்
- நின்றுகொண்டே வேலை செய்பவர்களுக்கு அவசியப்படும் போது ஆசன வசதிகள்
- அவசர நிலைமைகளின் போது பயன்படுத்துவதற்காக முதல் உதவிச் சாதனங்கள்
- வைத்தியசாலை, தொலைபேசி இலக்கங்கள்
- தீயணைப்பு திணைக்கள தொலைபேசி இலக்கம்

## தொழிற்சாலை தொழிலாளர்கள்

ஆடைத்தொழிற்சாலை, தேயிலை தொழிற்சாலை உட்பட அனைத்து தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உடனலத் தேவைகள் கருதி பின்வரும் வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

- ஊழியர்களின் உடனலத்திற்குச் சாதகமான வெப்பநிலை பேணப்படல்,
- போதியளவு இடவசதி.
- உடைகளை மாற்றுவதற்கும், அவற்றை வைப்பதற்கும் உகந்த இடம்,
- ஆரம்ப முதலுதவி வசதிகள்,

- சுகவீனமடையும் பொழுது வைத்தியப் பராமரிப்பு,
- வேலை செய்யும் இடத்தில் நிலம் ஈரலிப்பாக இருப்பதை தடுத்தல்,
- ஊழியர்களுக்கு காயங்களையும், விபத்துக்களையும் ஏற்படுத்தக்கூடிய நெருக்கல் நிலைகளை தவிர்த்தல்
- நிலம், கதவுகள், மாடிப்படிகள் ஆகியன உறுதியானதாக இருத்தல்
- பாரந்தூக்கும் கயிறுகள், சங்கிலிகள் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பரிசோதிக்கப்படல்
- தீயைத் தடுக்கும் சாதனங்கள் இருத்தல், இரைச்சலுக்கெதிராக காதுகளைப் பாதுகாக்கும் சாதனங்கள்

| குறிப்புகள் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |